பிரசார்பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை - 4

26 09 2026 SATURDAY 6 30 PM

<u>தலைப்புச் செய்திகள்</u>

1) ஊரக மக்கள் மற்றும் மகளிரின் மேம்பாட்டிற்காக கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருவதாக மத்திய அமைச்சர் திரு. அமித்ஷா தெரிவித்துள்ளார்.

2) வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்ள தயார்நிலையில் இருக்குமாறு உள்ளாட்சி அமைப்புகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக தமிழக அரசு தெரிவித்துள்ளது.

3) நேரடி நெல் கொள்முதல் நிலையங்களுக்கு தேவையான சேமிப்பு கிடங்குகள் விரைந்து அமைக்கப்படும் என்று மாநில அரசு கூறியுள்ளது.

4) உயர்கல்வி படித்து முடிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தித்தர மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு. விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

5) ஆசிய விளையாட்டுப் போட்டியில் இந்திய ஆடவர் கபடி அணி தங்கப்பதக்கம் வென்றது.

-- இனி விரிவான செய்திகள்---

------------

ஊரக மக்கள் மற்றும் மகளிரின் மேம்பாட்டிற்காக கூட்டுறவுத்துறை சிறப்பாக செயல்பட்டு வருவதாக அத்துறைக்கான மத்திய அமைச்சர் திரு. அமித் ஷா தெரிவித்துள்ளார்.

கேரளம் மாநிலம் கொல்லத்தில் மத்திய கூட்டுறவு அமைச்சகம் சார்பாக She Mart கடைகளை தொடங்கி வைத்து பேசிய அவர், இதன் மூலம், ஊரகப்பகுதி மகளிர் தொழில்முனைவோர்களாக வளர்ச்சி அடைய முடியும் என்று கூறினார்.

தமிழகம், கர்நாடகா மற்றும் கேரளத்தில் 300 She Mart கடைகள் செயல்பட்டு வருவதாக அவர் தெரிவித்தார்.

இந்தக் கடைகளில், வெங்காயம், அரிசி, மாவு உள்ளிட்ட உணவுப்பொருட்கள் மலிவு விலையில் விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், தேசிய வேளாண் கூட்டுறவு விற்பனை குழுமம் சார்பாக விவசாயக் குடும்பத்தை சேர்ந்த மாணவிகளுக்கு கல்வி உதவித்தொகையை திரு. அமித் ஷா வழங்கினார்.

------------

அனைத்து பொதுத்துறை வங்கிகளும், கிராமப்புற வங்கிகளும் வாடிக்கையாளர்களின் வசதிக்காக நாளை ஞாயிற்றுக்கிழமையன்றும் செயல்படும் என்று மத்திய நிதியமைச்சகம் அறிவித்துள்ளது.

வங்கி ஊழியர் சங்கங்கள் வரும் திங்கட்கிழமை முதல் 3 நாட்களுக்கு தேசிய அளவிலான வேலைநிறுத்தத்திற்கு அழைப்பு விடுத்துள்ள நிலையில் மத்திய அரசு இந்த நடவடிக்கையை எடுத்துள்ளது.

அனைத்து வங்கி கிளைகள், வங்கி சார்ந்த அலுவலகங்கள் மற்றும்

ஏடிஎம் வசதியுள்ள வங்கிகள் அனைத்தும் ஞாயிற்றுக்கிழமை அன்றும் முழு நேரமும் செயல்படுவதற்கு இந்திய ரிசர்வ் வங்கி அனுமதி அளித்துள்ளது.

வாடிக்கையாளர்களின் நலனை கருத்தில் கொண்டு பல பொதுத்துறை வங்கிகள் ஏடிஎம் பணப்பரிவர்த்தனைக்கான கட்டணங்களை தள்ளுபடி செய்துள்ளதாக அறிவித்துள்ளன.

மாதத்திற்கு 3 முறைக்கு மேலும் ஏடிஎம் சேவையை கட்டணமின்றி பயன்படுத்திக்கொள்ளலாம் என்றும் பொதுத்துறை வங்கிகள் அறிவித்துள்ளன.

------------

அமைதியாக போராட்டம் நடத்துவதற்கான மாணவர்களின் உரிமைகளை பேணிக்காக்க நீதிமன்றங்கள் உறுதி பூண்டிருப்பதாக உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி திரு. சூர்யகாந்த் தெரிவித்துள்ளார்.

பாட்னா, சாணக்கிய தேசிய சட்டப்பல்கலைக்கழகத்தில், மாணவர்களுடனான கலந்துரையாடலின் போது இதனை தெரிவித்த அவர், மாணவர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும் என்று கூறினார்.

ஐந்து வருட சட்டப்பட்டப்படிப்பை நான்கு ஆண்டுகளாக குறைத்து ஒரு வருட கட்டாய நீதிமன்ற பயிற்சி அளிக்க வேண்டும் என்ற பரிந்துரையை வரவேற்பதாக அவர் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் பாட்னா உயர்நீதிமன்ற தலைமை நீதிபதியும், பல்கலைக்கழக வேந்தருமான திரு. காமேஸ்வர ராவ் கலந்துகொண்டார்.

------------

தமிழ்நாட்டில் வடகிழக்கு பருவமழையை எதிர்கொள்வதற்கு அனைத்து உள்ளாட்சி அமைப்புகளும் தயார்நிலையில் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக நகராட்சி நிர்வாகத்துறை கூடுதல் தலைமை செயலர் திரு.ககன்தீப் சிங் பேடி தெரிவித்துள்ளார்.

சென்னையில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், நிலுவையில் உள்ள மழைநீர் வடிகால் பணிகள் மற்றும் வண்டல் மண் தூர்வாரும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருவதாக தெரிவித்தார்.

சென்னை மாநகராட்சியில் முதற்கட்டமாக ஒரு லட்சம் வண்டல் சேகரிப்பு தொட்டிகள் தூர்வாரப்பட்டு தற்போது இரண்டாம் கட்ட பணிகள் நடைபெற்று வருவதாகவும் குறிப்பிட்டார்.

வரும் 29-ம் தேதி அனைத்து மாவட்ட ஆட்சியர்களுடனும் வடகிழக்கு பருவமழை முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து காணொலி வாயிலாக ஆலோசனை செய்யப்பட உள்ளதாகவும் திரு. ககன் தீப் சிங் பேடி தெரிவித்தார்.

------------

அரசு நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்பனை செய்துவரும் விவசாயிகளுக்கு 5 நாட்களுக்குள் அதற்கான தொகையை வங்கி கணக்கில் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக மாநில அரசின் கூடுதல் தலைமை செயலர் திருமதி. அமுதா தெரிவித்துள்ளார்.

கடலூர் மாவட்டத்தில் உள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையங்களை பார்வையிட்டப்பின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்பட்டு திறந்தவெளியில் அடுக்கி வைக்கப்பட்டுள்ள நெல் மூட்டைகளை விரைவாக பாதுகாப்பான சேமிப்பு கிடங்குகளுக்கு கொண்டுசெல்ல நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் தெரிவித்தார்.

நெல் கொள்முதல் நிலையங்களில் பாதுகாப்பான சேமிப்பு கிடங்குகளை கடலூர் மற்றும் டெல்டா மாவட்டங்களில் உடனடியாக அமைக்க அரசு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் திருமதி அமுதா கூறினார்.

------------

மாநிலத்தில் உள்ள பல்கலைக்கழகங்களில் காலியாக உள்ள துணை வேந்தர் பணியிடங்களை நிரப்புவதற்கு மாநில அரசு நடவடிக்கை மேற்கொண்டுள்ளதாக உயர்கல்வித்துறை அமைச்சர் திரு விஸ்வநாதன் தெரிவித்துள்ளார்.

தென்காசியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், தமிழக ஆளுநர் திரு ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகருடன் கலந்து பேசி, துணைவேந்தர் பணியிடங்களை விரைவில் நிரப்புவதற்கான முயற்சிகளை முதலமைச்சர் திரு. விஜய் மேற்கொள்வார் என்றும் கூறினார்.

மனோன்மணீயம் சுந்தரனார் மற்றும் அழகப்பா பல்கலைக்கழகங்களுக்கு செனட் கமிட்டி மூலம் துணைவேந்தர்கள் தேர்வு செய்யப்பட்டு நியமனம் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

11 பல்கலைக்கழகங்களில், தற்காலிக துணைவேந்தர்களை நியமிக்கும் நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

இந்த நியமனத்தின் மூலம் பல்கலைக்கழகங்களின் நிர்வாகப் பணிகள் தடையின்றி நடைபெறும் என்றும் அவர் தெரிவித்தார்.

உயர்கல்வி படித்து முடிக்கும் மாணவர்களுக்கு வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தி தரும் நடவடிக்கைகளையும் அரசு மேற்கொண்டுள்ளதாகவும் திரு விஸ்வநாதன் கூறினார்.

------------

மின் கணக்கீட்டு பணியை தனியார் நிறுவனத்திடம் ஒப்படைக்கும் முயற்சியை மாநில அரசு கைவிட வேண்டும் என்று பாமக தலைவர் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அவர் இன்று வெளியிட்டுள்ள அறிக்கையில், மின்சார கணக்கீட்டை தனியார் நிறுவனங்களிடம் ஒப்படைப்பதால் மின்கட்டணம் வசூலிப்பதில் மேலும் சிக்கல் ஏற்படும் என்றும் தெரிவித்துள்ளார்.

ஒப்பந்த பணியாளர்களுக்கு பதிலாக நிரந்தர பணியாளர்களை நியமித்து மின் கணக்கீடு செய்ய வேண்டும் என்றும் டாக்டர் அன்புமணி ராமதாஸ் கூறியுள்ளார்.

------------

சென்னை உயர்நீதிமன்ற மதுரை கிளையில் தூய்மை பணி இயக்கம் இன்று நடைபெற்றது.

உயர்நீதிமன்ற நீதிபதிகள் இந்த இயக்கத்தில் பங்கேற்று சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருப்பதன் அவசியம் குறித்து எடுத்துரைத்ததாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

------------

தமிழகத்தின் மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்கள் மற்றும் உள் மாவட்டங்களின் ஓரிரு இடங்களில் லேசான மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையத்தின் தென்மண்டல இயக்குநர் டாக்டர் வி.ஆர். துரை தெரிவித்துள்ளார்.

எமது செய்தியாளரிடம் பேசுகையில் அவர் இவ்வாறு கூறினார்.

------------

மதுரை, மேற்கு கோட்டை வாசலில் சுற்றுலாத்துறை சார்பில் நடைபெற்ற பாரம்பரிய நடைபயணத்தை மாநில அமைச்சர் திரு. நிர்மல்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

------------

கன்னியாக்குமரி மாவட்டம் வடசேரி பேருந்துநிலைய வளாகத்தில் ஆட்சியர் திரு. பிரதாப் ஆய்வு மேற்கொண்டார்.

--------

நாகை மாவட்டம் காமேஸ்வரத்தில் போதைப்பொருள் ஒழிப்பை வலியுறுத்தி வண்ணமயமான காத்தாடி திருவிழாவை ஆட்சியர் திரு. பிரவீன்குமார் இன்று தொடங்கி வைத்தார்.

-----------

ஆசிய விளையாட்டு ஆடவர் கபடி போட்டியில் இந்தியா தங்கப்பதக்கம் வென்றுள்ளது.

ஜப்பானில் நடைபெற்று வரும் இப்போட்டிகளின் ஆடவர் கபடி இறுதியாட்டத்தில் 40-34 என்ற புள்ளிக்கணக்கில் ஈரானை வென்று இப்பதக்கத்தை கைப்பற்றியது.

பதக்கம் வென்ற இந்திய கபடி அணியினருக்கு குடியரசுத் தலைவர் திருமதி. திரௌபதி முர்மு, குடியரசு துணைத் தலைவர் திரு. சி.பி.ராதாகிருஷ்ணன், மத்திய இணையமைச்சர் டாக்டர் எல்.முருகன் உள்ளிட்டோர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

------------

எகிப்தில் நடைபெற்று வரும் சர்வதேச டென்னிஸ் போட்டியில் இந்தியாவின் கரண்சிங் இறுதி ஆட்டத்திற்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் ஒற்றையர் பிரிவு அரையிறுதி ஆட்டத்தில் அவர், 6-2, 3-6, 6-2 என்ற செட் கணக்கில் இங்கிலாந்தின் Paul Jubb-ஐ வென்றார்.

------------

>>>>>>END<<<<<<